# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

Regd. No. 124/MDS (Recognised)

(Affiliated to All India Federation of Power Diploma Engineers)

144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.

44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014.

Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| **Er. A.ANTONYPADOVARAJ** | **Er. V. ASHOKKUMAR** | **Er. R.BADRINARAYANAN** |
| 94438 72166 | 94442 13621 | 96001 49791 |


பெறுதல்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–600 002.

<u>க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/கோ.எண்.1/எண்.28,தேதி 18.11.2016.</u>

ஐயா,

பொருள்: மின்விநியோகப் பணிகளுக்கு தேவையான பணியாட்கள் மற்றும் பராமரிப்பு பொருட்கள் – வழங்கிட உரிய தனிப்பட்ட கவனம் வேண்டுதல் – பிரிவுப் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் மீது நியாயமற்ற நடவடிக்கைகள் மேற்கொள்வதை கைவிட வலியுறுத்தல் – தொடர்பாக.

–

மின்விநியோகப் பணிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டிட வாரியமும், தொழிற்சங்கங்களும், அரசும் இணைந்து உருவாக்கிய முத்தரப்பு ஒப்பந்தப்படி பணியாளர்கள் முழுமையாக நிரப்பிடாத நிலையில் மின்பராமரிப்பு பணிகள் வெகுவாக பாதிக்கப்பட்டு வருகின்றது. மின்தடை நீக்கப்பணிகள் மட்டுமே பெரும்பாலும் அனைத்து மின்விநியோக வட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பராமரிப்பு பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் நிர்வாகம் பொறியாளர்களை நிதி மேலாளராக மாற்றி வருவாய் சம்பந்தமான பணிகளில் மூழ்கச் செய்துவருகின்றது. இது தொடர்பாக பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டியது, விநியோகப் பிரிவுகளிலுள்ள நடைமுறை சிக்கல்கள் குறித்து பலமுறை, பல மட்டங்களில் முறையீடுகள் செய்தும் எந்த நிலையிலும் இது குறித்து பேசிடவோ, பிரச்சனைகளை தீர்த்திடவோ வாரியம் இதுவரை முன்வரவில்லை என்பது வருத்தமளிக்கின்றது.

மேற்கூறியவைகளை சரிசெய்யவேண்டிய கடமையும் பொறுப்பும் வாரியத்திற்கும், உயர்மட்ட அதிகாரிகளுக்கும் மட்டுமே உள்ளது.

வாரியப் பணிகளில் நிறுவப்பட்ட மின்சாதனங்கள் மற்றும் மின்பாதைகள் ஆகியவை அவற்றுக்கென நிர்ணயிக்கப்பட்ட பணிக்காலத்தை (Life period) கடந்தும் பல ஆண்டுகளுக்கு மேலாகியும் மாற்றி அமைக்கப்படாமல் இயக்கத்திலேயே உள்ளது.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

இந்நிலையில் மின்தடை மற்றும் எதிர்பாராத விபத்து நேரிடும்போது வாரியம் உரிய விசாரணை இன்றி பொறியாளர்கள், பணியாளர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு தண்டனை வழங்கிவருவது நியாயமற்றதாகவும், ஒருதலைப்பட்சமான செயல்பாடாகவும் உள்ளது.

எனவே, உரிய பணியாளர்கள், ஒப்பந்தப்படி நிரப்பிடும் வரையிலும், மின் சாதனங்கள் மற்றும் மின்பாதைகளை அவற்றின் பணிக்காலத்தை கருத்தில் கொண்டு புதிதாக மாற்றி அமைக்கும் வரையிலும் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் மீது நியாயமற்று நடவடிக்கை மேற்கொண்டு தண்டனை வழங்குவதை முற்றிலும் கைவிட்டு நியாயமாக நடந்து கொள்ளவும். உரிய பணியாளர்கள், தரமான பொருட்கள், பாதுகாப்பான வாழ்நாள் காலத்தை கடக்காத சாதனங்கள் ஆகியவற்றை வழங்கி உறுதி செய்து, அதன்பின் பொறியாளர்களும், பணியாளர்களும் பணி செய்யாமல் இருந்தால் உரிய விசாரணை செய்து அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வதே நிர்வாகத்திற்கு சரியானதும், நியாயமானதுமாகும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே, ஒப்பந்தப்படி பணியாட்களையும், உரிய தளவாடப் பொருட்களையும் வழங்காமலும், பணி செய்வதற்கு எந்த களச்சூழ்நிலையையும் ஏற்படுத்தாதவரையில், இது தொடர்பான செயல்பாட்டின் காரணமாக பிரிவுப் பொறியாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை கைவிடுமாறும் பொறியாளர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

நன்றி,

இப்படிக்கு,

(வி. அசோக்குமார்)
பொதுச் செயலாளர்.
18/11/16

நகல்

இயக்குனர் / உற்பத்தி / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
இயக்குனர் / நிதி / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
செயலாளர் / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
தொழில் நல்லுறவு ஆலோசகர் / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
சகோதர தொழிற்சங்கங்கள்.